# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 2087/17 - 2018 සැප්තැම්බර් මස 04 වැනි අඟහරුවාදා - 2018.09.04

*2087/17 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

*மத்திய மாகாண மாகாண சபை*

**மத்திய மாகாண மாகாண சபையின் முன்மொழியப்பட்ட "2018 ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க மத்திய மாகாண திகனை விளையாட்டுத் தொகுதி மற்றும் விளையாட்டு அபிவிருத்தி மன்றம்" நியதிச் சட்ட வரைபு**

*மத்திய மாகாண எல்லைக்குள் நடைமுறைப்படுத்தவிருக்கும் மேற்குறிப்பிட்ட நியதிச் சட்டத்தின் வரைபை மக்கள் கருத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இங்கு பிரசுரிக்கின்றேன்.*

*இது பிரசுரமான தினத்திலிருந்து 10 நாட்களின் பின்னர் இந்த நியதிச் சட்டம் மாகாண சபையில் சமர்ப்பிக்கப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது. இந்த நியதிச்சட்டத்தின் விடயங்கள் தொடர்பாக ஏதேனும் கருத்துக்கள் தெரிவிக்க விரும்புமிடத்து. இந்த அறிவித்தல் பிரசுரமாகும் தினத்திலிருந்து 10 நாட்களுக்குள் குறித்த கருத்துக்களை எழுத்து மூலமாக கீழ்வரும் முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்பி வைக்கலாம்.*

*திலின பண்டார தென்னகோன்,*
*மத்திய மாகாண விளையாட்டு, இளைஞர் விவகாரம்,*
*மகளிர் விவகாரம், கிராம அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் அமைச்சர்.*

*த.பெ. இல 41,*
*கெட்டம்பே*
*பேராதெனிய*

### திகன விளையாட்டுத் தொகுதி அபிவிருத்தி மன்றம் தொடர்பான நியதிச்சட்டம்

*மத்திய மாகாண திகன விளையாட்டுத் தொகுதியின் நிர்வாகம், பராமரிப்பு, விளையாட்டு அபிவிருத்தி என்பன தொடர்பான நடவடிக்கைகளுக்காக திகன விளையாட்டுத் தொகுதி மன்றத்தினை அமைப்பதற்காக இந்த விளையாட்டுத் தொகுதிக்காக மத்திய அரசின் விளையாட்டு அமைச்சுடன் மத்திய மாகாண சபை மேற்கொண்டுள்ள ஒப்பந்தத்தினை செயலிழக்கச் செய்வதற்காகவும் அதனுடன் தொடர்புடைய காரணிகளுக்கான விதிமுறைகள் தொடர்பான நியதிச் சட்ட வரைபாகும்.*

*மத்திய மாகாண சபையினால் கீழ்வருமாறு நியதிகள் விதிக்கப்படுகின்றன.*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

*1. இந்த நியதிச் சட்ட வரைபு மத்திய மாகாணத்தின் 2018 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க திகன விளையாட்டுத் தொகுதி அபிவிருத்தி மன்றம் தொடர்பான நியதிச்சட்டம் என அழைக்கப்படுவதுடன் மத்திய மாகாணத்தின் ஆளுநர் அனுமதி வழங்கியதன் பின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் விதிக்கப்படும் திகதி முதல் இது நடைமுறைக்கு வருவதாக அமையும்.*


1A - PG 4200 — 107 (2018/08)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## I ஆம் பகுதி

### மத்திய மாகாண திகன விளையாட்டுத் தொகுதி அபிவிருத்தி மன்றத்தை நிறுவுதல்

*திகன விளையாட்டுத் தொகுதி அபிவிருத்தி மன்றம் அமைத்தல்.*

2. (1) இதன் பின்னர் ''மன்றம்'' என அடையாளப்படுத்தப்படும் மத்திய மாகாணத்தின் திகன விளையாட்டுத் தொகுதி அபிவிருத்தி மன்றம் நிறுவப்படுகின்றது.

3. மன்றத்தின் நோக்கங்கள் கீழ்வருமாறு அமையும் :-

(1) விளையாட்டுத் துறையை ஊக்குவித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ;

(2) நோய்கள் அற்ற உற்சாகம் மிக்க மக்களை உருவாக்குவதற்கு உதவுதல் ;

(3) விளையாட்டுத் துறையை ஊக்குவித்தல் ;

(4) விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான வசதிகளை வழங்குதல் ;

(5) விளையாட்டுத் தொகுதிக்கு வரும் மக்கள் மகிழ்ச்சியாக பொழுதுபோக்கும் விதத்தில் வசதிகளை அமைத்துக் கொடுத்தல் ;

(6) உள்நாட்டு, வெளிநாட்டு விளையாட்டு வீரர்களைப் பயிற்றுவித்து சர்வதேச மட்டத்திற்காக அவர்களைத் தயார்படுத்தல் ;

(7) விளையாட்டுத் துறையுடன் தொடர்புடைய அனைத்து உத்தியோகத்தர்களினதும் அறிவு, ஆற்றல், மனப்பாங்கு என்பவற்றை விருத்தி செய்வதற்கான வசதிகளை அமைத்துக் கொடுத்தல் ;

(8) எதிர்கால சந்ததிக்காக விளையாட்டு மைதானத்தைப் பராமரித்து பாதுகாத்தல் ;

(9) கிராமப்புற விளையாட்டு வீரர்களுக்கு சர்வதேச தரத்திலான பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளும் வசதி கொண்ட விளையாட்டுத் தொகுதியை உருவாக்கல் ;

(10) விளையாட்டுத் தொகுதியைச் சூழ வசிக்கும் மக்களின் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் புதிய தொழில் துறைகளுக்கான வாய்ப்புக்களை உருவாக்கல் ;

(11) தூரப் பிரதேசங்களில் இருந்து வருபவர்களுக்கு தங்கியிருந்து விளையாட்டுத் திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்காக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

*சட்டரீதியான அமைப்பு.*

4. மன்றம் அதனது பெயரில் வழக்குத் தொடரவும் வழக்குத் தொடரப்படவும் முடியும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு பொதுவான முத்திரையுடன் சுயாதீனமாகவும் தொடராகவும் இயங்கத்தக்க நிறுவனமாகும்.

*நிர்வாகக் குழுவின் கட்டமைப்பு*

5. (1) மன்றத்தின் நடவடிக்கைகளை இதன் பின் ''குழு'' என்பதாக அடையாளப்படுத்தப்படும் நிர்வாகக் குழுவினால் நிர்வாகம் மற்றும் முகாமை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(2) குழுவின் அங்கத்துவம் கீழ்வரும் பதவி ரீதியான அதிகாரத்தின் மூலம் நியமனம் பெறுகின்ற அங்கத்தவர்களைக் கொண்டிருக்கும் :-

(i) மாகாண சபையின் பிரதான செயலாளர் ;

(ii) மத்திய அரசின் விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் ;

(iii) மத்திய மாகாண சபையின் பிரதிப் பிரதான செயலாளர் (நிதி) ;

(iv) மத்திய மாகாண சபையின் பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவை) ;

(v) பிரதேச செயலாளர், குண்டசாலை ;

(vi) மத்திய மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் ;

(vii) மத்திய மாகாண சபையின் விளையாட்டுக் கல்விப் பணிப்பாளர்.

(3) குழுவின் அங்கத்தவர்கள் அனைவரும் மத்திய மாகாண விளையாட்டு அமைச்சரின் பரிந்துரைக்கு அமைய மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட வேண்டும். அத்துடன் மாகாண பிரதான செயலாளர் தலைவர்களாகவும், மாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் குழுவின் செயலாளராகவும் நியமிக்க வேண்டும்.

குழுவின் கூட்டங்களும் குறைந்தபட்ச எண்ணிக்கையும்.

6. (1) இந்த நியதிச்சட்டம் செல்லுபடியாகும் தினத்திலிருந்து ஆறு (06) மாத காலத்தில் மாதம் ஒரு முறை குழுக் கூட்டம் நடைபெற வேண்டும் என்பதுடன் அதன் பின்னர் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது தேவைக்கு ஏற்ப நிர்வாகக் குழுவின் தீர்மானத்திற்கு அமைய கூட்டங்கள் நடைபெற வேண்டும்.

(2) அனைத்துக் கூட்டங்களுக்கும் குறைந்தது மூன்று அங்கத்தவர்களேனும் கலந்து கொள்ளல் வேண்டும்.

பொது முத்திரை.

7. மன்றத்தின் பொது முத்திரை நிர்வாகக் குழுவின் செயலாளர் வசம் இருத்தல் வேண்டும் என்பதுடன் மன்றத்திற்காகக் கையொப்பமிடப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் அனைத்து ஆவணங்களிலும் தலைவர் மற்றும் செயலாளரால் கையொப்பமிட்டு பொது முத்திரை வைக்கப்பட வேண்டும்.

மன்றத்தின் அதிகாரங்களும் கடமைகளும்.

8. மன்றத்தின் அதிகாரங்களும் பொறுப்புக்களும் கீழ்வருமாறு அமையும் :-

(1) திகன விளையாட்டுத் தொகுதியின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு சம்பந்தமான விடயங்கள் தொடர்பாகத் தீர்மானங்கள் எடுப்பது மற்றும் இவை மாகாண சபையின் சொத்துக்கள் என்ற அடிப்படையில் அவற்றைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்தல் ;

(2) திகன விளையாட்டுத் தொகுதியின் தோற்றத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் தொடர்பான தீர்மானங்கள் எடுத்தல் ;

(3) புதிய வருமான மூலங்களை அடையாளம் காணல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ;

(4) திகன விளையாட்டுத் தொகுதியின் ஊழியர்களை நிர்வகித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் வழிநடாத்தல் ;

(5) திகன விளையாட்டுத் தொகுதியின் நிர்வாகம் மற்றும் பராமரித்தலை இலகுபடுத்துவதற்காக வருமானம் தொடர்பான உப குழு, திட்டமிடல் உப குழு, பராமரிப்பு உப குழு, விளையாட்டு உப குழு, வைத்தியக் குழு என்ற அடிப்படையில் தேவைக்கு ஏற்ப உப குழுக்களை நிறுவி அவற்றுக்கான விதிமுறைகள் வழிகாட்டல்களை வழங்குதல் ;

(6) அசையும் அசையா சொத்துக்கள் சுவீகரித்தல், விற்பனை செய்தல், அடகு வைத்தல், குத்தகைக்கு வழங்குதல், மாற்றீடு செய்தல் அல்லது ஏதாவது முறையில் கைமாறல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(7) 1978 ஆம் ஆண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் விதிமுறைகளுக்கு அமைய மற்றும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண நியதிகளுக்கு இசைவாக அரச மற்றும் அரசு சாரா அமைப்புக்கள், மக்கள் கூட்டுத்தாபனங்கள், தனிநபர்கள் மூலமாக அசையும் அசையாச் சொத்துக்களாகக் கிடைக்கும் அன்பளிப்புக்களைப் பெற்றுக்கொள்ளல் ;

(8) இந்த நியதிச் சட்டத்தின் நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல்.

(9) மன்றத்தின் செயற்பாடுகளை நிர்வகித்தல் பொருட்டு தேவையான பதவிகள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கைகளை ஆராய்தல், ஊழியர்களை சேவையில் இணைத்துக்கொள்ளல், பதவி உயர்வு வழங்கல், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகளை விதித்தல், ஊழியர்களை பதவி நீக்கம் செய்தல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளல் ;

(10) திகன விளையாட்டுத் தொகுதி அபிவிருத்தி மன்றமானது இலாபம் ஈட்டும் நிலையை அடையுமாயின் நிர்வாகக் குழு மற்றும் உப குழுக்களுக்கு வழங்க வேண்டிய கொடுப்பனவுகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளல் ;

(11) அலுவலக பணியாளர்களின் வேதனம் மற்றும் கொடுப்பனவுகளைத் தீர்மானித்தல் ;

(12) விளையாட்டுக்களுக்கான பாடநெறிகள் அமைத்தல், பயிற்சிப் பட்டறைகளை நடாத்துதல் மற்றும் பல்வேறு பாடநெறிகளுக்கான பயனாளர் பயிற்றுவித்தல் என்பவற்றுக்கான நடவடிக்கைகளை எடுத்தல் ;

(13) விளையாட்டுப் பயிற்சி நிலையம் அமைத்தல் போன்ற விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(14) மாகாணத்துக்கு உட்பட்ட பாடசாலை மற்றும் விளையாட்டு அபிவிருத்திக்காக விளையாட்டு மைதானத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வேண்டுகோள்களை பரிசீலித்தல் ;

9. மன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் நிர்வாகக் குழுவினால் செயற்படுத்தப்பட வேண்டும்.

நிர்வாக அறிக்கை.

10. ஒவ்வொரு மாதமும் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் மன்றத்தின் நிர்வாகம், அபிவிருத்தி மற்றும் நிதி முன்னேற்ற விபரம் அடங்கிய நிர்வாக அறிக்கை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் மூலமாக மாகாண சபைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## II ஆம் பிரிவு

## பணியாளர்கள்

பணியாளர்கள்.

11. (1) முகாமையாளர் மன்றத்தின் பிரதான நிர்வாக உத்தியோகத்தராவார். இப்பதவிக்கு விளையாட்டுத்துறை திணைக்களத்தில் பணியாற்றும் உதவிப் பணிப்பாளர்களில் ஒருவர் தெரிவுசெய்யப்படல் வேண்டும். நிர்வாகக் குழுவின் ஒப்புதலுடன் தலைவரால் இந்தத் தெரிவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

(2) முகாமையாளருக்கு உதவியாக அலுவலகப் பணியாளர்கள் குழு ஒன்று நியமிக்கப்பட முடியும். அவ் அலுவலகர் குழுவில் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள் என்போர் மாகாண விளையாட்டுத் துறைத் திணைக்களத்தில் பணியாற்றும் அலுவலர்களில் இருந்து நியமிக்கப்பட வேண்டும் என்பதுடன் மற்றைய அலுவலர்கள் நிர்வாகக் குழுவினால் இணைத்துக்கொள்ளல் விதிகளுக்கு அமைய நியமிக்க முடியும்.

(3) இந்த மன்றத்திற்காக நியமனம் செய்யப்படுகின்ற அலுவலர் தொகை மற்றும் அவர்களைச் சேர்த்துக்கொள்வது தொடர்பான விதிமுறைகள் என்பவை தொடர்பில் நியதி ஒன்று நிர்வாகக் குழுவினால் அமைக்கப்பட்டு அதற்கான அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

## III ஆம் பிரிவு

## ஆலோசனைக் குழு

ஆலோசனைக் குழுவின் கட்டமைப்பு.

12. 12.1 நிர்வாகக் குழுவின் நடவடிக்கைகளுக்கு அவசியப்படும்போது ஆலோசனை வழங்குவதற்காக ஆலோசனைக் குழு அமைந்திருக்கும்.

12.2 ஆலோசனைக் குழு கீழ்வரும் அடிப்படையில் அமைந்திருக்கும் :-

(1) மத்திய அரசின் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் ;

(2) மாகாண சபையின் உறுப்பினர்கள் (04) நால்வர் ;

12.3 ஆளுநர் மூலமாக தகுந்த காரணம் கூறி நீக்கப்படாதவிடத்து ஆலோசனைக் குழுவின் ஆயுட்காலம் (03) மூன்று வருடங்களாகும். விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு இந்த நிபந்தனை செல்லுபடியாகாது.

12.4 ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் ஒருவர் தாமாக நீங்கிக்கொள்ளுதல், நீக்கப்படல் அல்லது மரணமடைதல் மூலமாக உருவாகும் வெற்றிடத்தை ஆளுநர் இன்னொரு மாகாண சபை உறுப்பினரை நியமிப்பதன் ஊடாக நிரப்ப வேண்டும்.

13. ஆலோசனைக் குழுவின் பணிகளும் அதிகாரங்களும் :- பணிகளும் அதிகாரங்களும்.

(1) நிர்வாகக் குழு ஆலோசனை வேண்டி நிற்கும் சந்தர்ப்பங்களில் ஆலோசனை வழங்குதல் ;

(2) மத்திய மாகாண திகன விளையாட்டுத் தொகுதியை விரிவுபடுத்துவதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு நிதி உதவிகள் பெற்றுக்கொள்ள முடியுமான அடிப்படையிலான ஆலோசனைகள் வழங்குதல் ;

(3) விளையாட்டுத் திறன்களை விருத்தி செய்வதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு விசேட துறைசார் பயிற்றுவிப்பாளர் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழிகாட்டல் வழங்குதல் ;

(4) விளையாட்டுத் துறை உப குழுவின் முன்னேற்றங்களை மேற்பார்வையிடல் மற்றும் அவர்களது நடவடிக்கைகளை மதிப்பீடு செய்தல் ;

(5) நிர்வாகக் குழுவில் பிணக்குகள் ஏற்படும்போது மத்தியஸ்தராக செயற்படல்.

14. நிர்வாகக் குழு வேண்டி நிற்கும்போது அல்லது அவசியம் எனக் கருதுமிடத்து ஒன்றுகூடல் நடாத்த முடியும். ஆலோசனைக் குழுவின் கூட்டங்கள்.

15. ஆலோசனைக் குழுவின் கூட்டங்கள் மற்றும் ஏனைய பணிகள் என்பவற்றுக்கு இணைப்பாளராக மாகாண விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் செயற்படுவார். ஆலோசனைக் குழுவின் இணைப்பாளர்.

IV ஆம் பிரிவு

**மன்றத்தின் கணக்குகள்**

16. (1) மன்றத்திற்காக "மத்திய மாகாண திகன விளையாட்டுத் தொகுதி அபிவிருத்தி மன்றம்" என்ற பெயரில் வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட வேண்டும்.

(2) கணக்கிற்கு பணம் கிடைக்கப்பெறும் மூலங்கள் வருமாறு :-

(i) மத்திய அரசினால் கிடைக்கும் நிதி ;

(ii) மாகாண நிதியத்திலிருந்து கிடைக்கும் நிதி ;

(iii) மன்றத்தினால் ஈட்டப்படும் வருமானம் ;

(iv) அரச மற்றும் அரச சாரா நிறுவனங்களில் இருந்து கிடைக்கும் நிதி ;

(v) தனிநபர் மற்றும் கூட்டுத்தாபனங்களில் இருந்து கிடைக்கும் நிதி.

17. கீழ்வரும் கருமங்களுக்காக கணக்கின் நிதியை பயன்படுத்த முடியும் :- கணக்கிலிருந்து செலவிடல்.

(1) விளையாட்டுத் தொகுதியின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு ;

(2) ஊழியர் வேதனம் மற்றும் கொடுப்பனவுகள் ;

(3) அசையும் அசையாச் சொத்துக்கள் கொள்வனவு செய்தல் ;

(4) விளையாட்டுத் தொகுதியை விஸ்தரித்தல் தொடர்பான பணிகள் ;

(5) ஊழியர்களுக்கான பல்வேறு பயிற்சி நெறிகளுக்காகப் பங்குபற்றல் மற்றும் பயிற்சி பெறுவதற்காக ;

(6) மன்றத்தின் பணிகளை மேற்கொள்வதற்காக ஏற்படும் செலவுகள்.

18. வங்கிக் கணக்கு அரசின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றில் பேணப்படல் வேண்டும்.

வங்கிக் கணக்கிலிருந்து மீளப் பெறுதல்.

19. வங்கிக் கணக்கிலிருந்து பணம் மீளப்பெறும் போது குழுவினால் நியமிக்கப்படுகின்ற மூன்று பேர் கொண்ட குழுவொன்றின் பரிந்துரைக்கு அமைய நிர்வாகக் குழுவின் செயலாளர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் கையொப்பத்துடன் முகாமையாளரின் கையொப்பமும் இடுவது மூலமாக கணக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

20. அனைத்து வருடங்களிலும் சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதி நிதியாண்டாகக் கணிக்கப்படும்.

கணக்கு அறிக்கை.

21. அனைத்து வருமானங்களினதும் செலவுகளினதும் கணக்கு பதியப்பட வேண்டும் என்பதுடன் கணக்கு அறிக்கை மாதாந்தம் நிர்வாகக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கணக்காய்வு.

22. கணக்குகள் கணக்காய்வாளர் நாயகத்தின் வருடாந்த கணக்காய்வுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட வேண்டும்.

## V ஆம் பிரிவு

மேன்முறையீடு.

## பொது நியதிகள்

23. குறித்த குழு வழங்கும் தீர்ப்பை ஏற்றுக்கொள்வது இரு தரப்பினதும் பொறுப்பாகும் என்பதுடன் குறித்த தீர்ப்பு தொடர்பான மேன்முறையீட்டினை மத்திய மாகாண ஆளுநரிடம் சமர்ப்பிக்கலாம். ஆளுநரின் முடிவே இறுதியானதாகும்.

24. (01) நியதிச் சட்டத்தின் ஊடாக அமைக்கப்பட்டுள்ள நியதிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கீழ்வரும் காரணிகளுக்கு அமைய நியதிகளை உருவாக்கும் உரிமை அமைச்சரைச் சாரும் :

(1) விளையாட்டு உப குழு அமைத்தல், அவற்றுக்கான பொறுப்புக்கள், கடமைகள், அவற்றுக்கான நடைமுறைகள், அவற்றுடன் தொடர்பான விதிமுறைகள் ;

(2) விளையாட்டுத் தொகுதியை வெளி நபர் அல்லது வெளி நிறுவனங்களின் பாவனைக்கு ஒதுக்குதல் தொடர்பான விதிமுறைகள் ;

(3) விளையாட்டுப் பாடநெறிகள் அறிமுகப்படுத்தல் தொடர்பான விதிமுறைகள் ;

(4) விளையாட்டுத் தொகுதியை நிர்வகிப்பவர்கள் தொடர்பான விதிமுறைகள் ;

(5) விளையாட்டுத் தொகுதியை ஒதுக்கிக் கொள்வதற்கான கட்டணங்கள் தொடர்பான விதிமுறைகள்.

(02) மன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றும்போது அவசியப்படுகின்ற மற்றைய விடயங்கள் தொடர்பான நியதிகளை உருவாக்கும் அதிகாரம் அமைச்சரைச் சாரும்.

25. அமைச்சரினால் உருவாக்கப்படும் அனைத்து நியதிகளும் அரச வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட வேண்டும் என்பதுடன் வர்த்தமானியில் பிரசுரித்து ஒரு மாத காலத்துக்குள் மாகாண சபைக்கு முன்வைக்கப்பட வேண்டும். அவற்றில் ஏதாவது ஒரு விதிமுறையை மாகாண சபை ஏற்காதவிடத்து அவ்விதிமுறையின் கீழ் குறித்த நிபந்தனை அனுமதி இல்லாத திகதி முதல் அனுமதி வழங்கிய திகதி வரையான காலப்பகுதியில் செய்யப்பட்ட பணிகளுக்கு எந்தவித பாதகங்களும் ஏற்படாதவாறு அந்நிபந்தனைகள் நீக்கப்பட்டதாகக் கருதப்படுவதுடன் அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும். மாகாண சபை அனுமதி வழங்கும் அனைத்து நியதிகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

*26*. இந்த நியதிச் சட்டத்தில் உள்ளடங்குகின்ற அனைத்து அங்கத்தவர்களும், அலுவலர்களும் குற்றவியல் தண்டனைச் சட்டத்திற்கு உட்பட்ட அடிப்படையிலும் அதன் அலுவல்கள் தொடர்பில் அரச உத்தியோகத்தராகவும் கருதப்படல் வேண்டும். இந்த மன்றமானது இலஞ்ச ஊழல் சட்டத்திற்கு உட்பட்ட நிறுவனமாகக் கருதப்பட வேண்டும் என்பதுடன் அந்த நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைய வடிவமைக்கப்படல் வேண்டும்.

*27*. நியதிச் சட்ட வரைபின் ஏதேனும் விதிமுறைகளை அல்லது நிபந்தனைகளை யாரேனும் மீறுமிடத்து அவர் இந்த நியதிச் சட்டத்தின் பிரகாரம் குற்றமிழைத்தவராகக் கருதப்படுவதுடன் நீதவான் நீதிமன்றம் ஒன்றில் வழக்குத் தொடரப்படுவதற்கும் அதன் ஊடாக குற்றவாளியாக நிறுவப்படுமித்து ஐயாயிரம் ரூபா (5,000.00 ரூபா) அபராதம் அல்லது ஆறு (06) மாத சிறைத் தண்டனை என்பவற்றில் ஒன்று அல்லது இரண்டும் என்ற அடிப்படையில் தண்டனை வழங்கப்படலாம். குற்றமும் தண்டனையும்.

*28*. இந்த நியதிச் சட்டம் மத்திய மாகாண ஆளுநரால் அனுமதிக்கப்படும் திகதி மற்றும் அமுல்படுத்துவதற்காக அமைச்சரால் தீர்மானிக்கப்படும் தினத்திலிருந்து அமுலாவதுடன் மத்திய அரசின் விளையாட்டு அமைச்சின் செயலாளர் மற்றும் மத்திய மாகாண பிரதான செயலாளர் இடையே கைச்சாத்திடப்பட்ட விளையாட்டுத் தொகுதி தொடர்பான ஒப்பந்தம் செயலிழக்கப்பட்டதாகும்.

VI ஆம் பிரிவு

**பதங்கள் தொடர்பான விளக்கம்**

*29*. பதங்கள் தொடர்பான விளக்கங்கள் அவசியப்படுமிடத்து- பதங்களுக்கான விளக்கம்.

"திகன விளையாட்டுத் தொகுதி" என்பதாவது, உள்ளக விளையாட்டு அரங்கு, நீச்சல் தடாகம், வெளிக்கள விளையாட்டு மைதானம், பார்வையாளர் அரங்கு, உடற்பயிற்சி மையம், சிற்றுண்டிச்சாலை என்பன உட்பட அனைத்துக் கட்டிடங்களும் விளையாட்டுத் தொகுதிக்கு உட்பட்ட நிலப்பரப்பையும் குறிக்கும்.

"மாகாண சபை" என்பதாவது, மத்திய மாகாண சபையைக் குறிக்கும்.

"ஆளுநர்" என்பதாவது, மத்திய மாகாண ஆளுநரைக் குறிக்கும்.

"அமைச்சர்" என்பதாவது, மத்திய மாகாண சபையின் விளையாட்டுத் துறை விடயத்துக்கான அமைச்சரைக் குறிக்கும்.

"பிரதான செயலாளர்" என்பதாவது, மத்திய மாகாண பிரதான செயலாளரைக் குறிக்கும்.

"மாகாண விளையாட்டுத்துறை அமைச்சு" என்பதாவது, திகன விளையாட்டுத் தொகுதியுடன் இணைந்த நிறுவனமாகும்.

"செயலாளர்" என்பதாவது, மத்திய மாகாண சபையின் விளையாட்டுத் துறை விடயம் சார்ந்த அமைச்சின் செயலாளரைக் குறிக்கும்.

"மாகாணப் பணிப்பாளர்" என்பதாவது, மத்திய மாகாணத்தின் மாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளரைக் குறிக்கும்.

*30*. இந்த நியதிச்சட்ட வரைவு சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளிலான பிரசுரங்களில் ஏதும் முரண்பாடுகள் இருக்குமிடத்து, சிங்கள மொழியிலுள்ள பிரகடனமே வலுப்பெறுவதாக இருக்கும். சிங்கள மொழிப் பிரதி வலுப்பெறுதல்.

*9-452*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.